3. அறிவிப்புகள்—(தொடர்ச்சி)

(ஆ) மதுரை காமராசர் பல்கலைக் கழகப் பேரவைக்கு உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மதுரை காமராசர் பல்கலைக் கழகப் பேரவைக்கு (செனட்) ஒன்பதாவது சட்டமன்றப் பேரவையின் சார்பில் நால்வரைத் தங்களிலிருந்து தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு, மதுரை காமராசர் பல்கலைக் கழகம் கோரியுள்ளது. தேர்ந்தெடுக்கப்படுபவர்களின் பதவிக் காலம் 16-8-1990 அன்று முடிவுறும்.

(இ) அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பேரவைக்கு உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பேரவைக்கு (செனட்) ஒன்பதாவது சட்டமன்றப் பேரவையின் சார்பில் மூவரைத் தங்களிலிருந்து தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு, அண்ணாமலைப் பல்கலைக் கழகம் கோரியுள்ளது. தேர்ந்தெடுக்கப்படுபவர்களின் பதவிக் காலம் 5-12-1989 அன்று முடிவுறும்.

(ஈ) சென்னைப் பல்கலைக்கழகப் பேரவைக்கு உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சென்னைப் பல்கலைக்கழகப் பேரவைக்கு (செனட்) ஒன்பதாவது சட்டமன்றப் பேரவையின் சார்பில் அறுவரைத் தங்களிலிருந்து தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு, சென்னைப் பல்கலைக் கழகம் கோரியுள்ளது. தேர்ந்தெடுக்கப்படுபவர்களின் பதவிக்காலம், தேர்ந்தெடுக்கப் பட்ட நாளிலிருந்து மூன்றாண்டுகளாகும்.

(உ) தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகப் பேரவைக்கு உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தஞ்சாவூர் தமிழ்ப்பல்கலைக் கழகப் பேரவையில் (செனட்) ஏற்பட்டுள்ள இரண்டு வெற்றிடங் களுக்குத் தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினர்கள் தங்களிலிருந்து இருவரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு, தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகம் கோரியுள்ளது. தேர்

தெடுக்கப்படுபவரின் பதவிக்காலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டுகளாகும். பல்கலைக் கழகத்தின் விதி முறைப்படி, பகுதிவாரி அடிப்படையில் (proportional Representation) இத்தேர்வு நடைபெறுவதில்லை.

(ஊ) சென்னை அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிற்கு உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சென்னை, அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழுவிற்கு (சிண்டிகேட்) இச்சட்டமன்றப்பேரவைஉறுப்பினர்கள் தங்களிலிருந்து ஒருவரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகம் கோரியுள்ளது. தேர்ந்தெடுக்கப் படுபவரின் பதவிக் காலம், தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டுகளாகும்.

எனவே, வேட்பாளர்கள் நியமனத்தாள்களை 24-4-1989 திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத் தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத் தாள்கள் 25-4-1989 செவ்வாய்க்கிழமை காலை 11.00 மணிக்குப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 26.4.1989 புதன் கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின் 28-4-1989 வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே, சென்னை கோட்டையில் இருக்கும் குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

(எ) திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழக ஆட்சிக்குழுவிற்கு உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருச்சிராப்பள்ளி, பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் பேரவைக்கு (செனட்) எட்டாவது சட்டமன்றப் பேரவையின் சார்பில் தேர்ந்தெடுக்கப் பெற்ற திருவாளர்கள் க. பாலசுப்பிரமணியன், கி. கிருஷ்ணமூர்த்தி ஆகியோரது பதவிக் காலம் முடிவடைந்துள்ளதால், அப்பல்கலைக் கழகம் தனது ஆட்சிக் குழுவிற்கு (செனட்) மூன்றாண்டுக் காலம் பணியாற்ற இப்பேரவை உறுப்பினர்களிலிருந்து இருவரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு கோரியுள்ளது. இரு உறுப்பினர்கள் தீர்மானம் முன்மொழிவதன் மூலம் தேர்ந் தெடுக்கப் பெற வேண்டும்.